

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் (1.3.2025) அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று நோபல் பரிசு வென்ற, பத்ம விபூசன் விருது பெற்ற தமிழ்நாட்டின் இயற்பியல் விஞ்ஞானி டாக்டர்.சு.சந்திரசேகர் அருங்காட்சியத்தை திறந்து வைத்து, சர்.சி.வி. இராமன் அவர்கள் பயின்ற வகுப்பறையில், மாணவ, மாணவிகளுடன் அமர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், உயர் கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் பேராசிரியர்கள் உடன் உள்ளனர்.

## அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார்! ஆளுநர் போட்டியிட வேண்டாம்!

# கச்சத்தீவு பற்றிய ‘கப்ஸா’ கதைகளைப் பேசுவதை நிறுத்துங்கள் ஆளுநரே!

### சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

சென்னை, மார்ச் 3-

அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார். ஆளுநர் போட்டியிட வேண்டாம் என ஆளுநருக்கு சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பதில் அளித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

கச்சத் தீவை வைத்து கச்சைக் கட்ட முயல்கிறார் ஆளுநர் ரவி. ‘கச்சத்தீவில் நம் மீனவர்களின் உரிமையைப் பறித்ததற்கு அப்போதைய மத்திய, மாநில அரசுகளே காரணம். 1974 தவறுக்கு அப்போது மத்தியில் கூட்டணியில் இருந்த இன்றைய மாநில ஆளுங்கட்சிக்கும் பொறுப்பு’ எனத் துருப்பிடித்த ஆயுதத்தைத் தூக்கிக் கொண்டு வந்திருக்கிறார் ஆளுநர் ரவி.

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டு சிறை பிடிக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 2024-ஆம் ஆண்டில் 528 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தாண்டு ஜனவரியில் மட்டும் 53 மீனவர்கள் கைதானார்கள். முதலமைச்சர் அவர்கள் கடிதம் வாயிலாக வலியுறுத்தியும் , திமுக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டம் செய்தும் தமிழ்நாடு மீனவர்களை மீட்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை ஒன்றிய பாஜக அரசு. தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் தடுக்கத் தவறிய ஒன்றிய பாஜக அரசின் இயலாமையை மறைக்க ஆளுநர் ரவி தமிழ்நாடு அரசு மீது வீண் அவதூறு பரப்பி வருகிறார்.

கச்சத்தீவு தொடர்பாகக் கழகத்தின் மீது வீண் அவதூறு பரப்பும் விஷமிகளுக்குக் கழக மூத்த முன்னோடிகளும், முதலமைச்சர் அவர்களும் பல முறை விளக்கம் கொடுத்துவிட்டனர். இருந்தாலும் எத்தனை விளக்கம் கூறினாலும் விளங்காத ஆளுநர் ரவிக்கு மீண்டும் சொல்கிறேன். கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதிதான் என்பதற்கான ஆதாரத்தைக் கொடுத்ததே அப்போதைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான தலைவர் கலைஞர்தான். அதோடு நாடாளுமன்றத்தில் எதிர்ப்பு தெரிவித்து அவையை விட்டு வெளியேறியது திமுக. அதுமட்டுமல்லாது கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யக் கோரி அப்போதைய திமுக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றியது. இந்த வரலாற்று உண்மைகள் எல்லாம் வரலாற்றைப் படிப்பவர்களுக்குத் தெரியும் ஆனால் வாட்ஸ் அப் யுனிவர்சிட்டியில் வரும் வதந்திகளை வரலாறாக நினைத்துப் படிக்கும் ஆளுநர் ரவிக்கு இதெல்லாம் தெரியாதுதான்.

கடந்த ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் கச்சத்தீவு பற்றி ஒரு ஆர்.டி.ஐ. ஆவணம் வெளியாகி உள்ளதாகச் சொல்லி புரளியைக் கிளப்பி குறளி வித்தை காட்டினார் அண்ணாமலை. அதனைப் பிரதமர் மோடி முதல் வெளியுறவுத் துறை அமைச்சர் வரை உண்மையாக்க முயன்றார்கள். கச்சத்தீவு பற்றிக் கடந்த 10 ஆண்டுகளாகப் பேசாத மோடி, திடீர் புரட்சியாளராக மாறி தேர்தல் பிரசாரத்தில் பேசினார். ஆனாலும் 40 தொகுதிகளிலும் பாஜக கூட்டணி தோற்றுப் போனது.

புஸ்வாணம் ஆன விவகாரத்தை இப்போது ஆளுநர் ரவி தூக்கிக் கொண்டு வந்து கலர் மத்தாப்பு காட்ட முயல்கிறார். தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாடு மட்டுமல்லாது தென்னிந்தியா முழுமையும் வஞ்சிக்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுப்பிய விவகாரம் இந்தியா முழுமைக்கும் பேசு பொருளாகியிருக்கிறது. தெலங்கானா, கர்நாடக மாநிலங்கள் எதிர்ப்புக் குரல் எழுப்ப ஆரம்பித்திருக்கின்றன. எங்கே இந்தியா முழுமைக்கும் அது எதிரொலித்துவிடப் போகிறது என்ற அச்சத்தில் அதனைத் திசை திருப்ப ஒன்றிய அரசின் அஜெண்டாவை நிறைவேற்றக் கச்சத் தீவைக் கையில் எடுத்திருக்கிறார் ஆளுநர் ரவி.

1974ல் போன கச்சத் தீவைப் பற்றி கவலைப்பட்ட பிரதமர் மோடி அவர் கண் முன்னே இந்தியாவின் 2000 சதுர கி.மீ பகுதிகள் சீனா ஆக்கிரமித்த போது அமைதியாக இருந்தார். கடந்த மக்களவைத் தேர்தலில், ‘அறிவியல் பூர்வமாகவும், சட்டப்படியும் அணுகி கச்சத்தீவைக் கண்டிப்பாக மோடி அரசு மீட்கும்” என்று சொன்னவர்கள் எங்கே போனார்கள்? தேர்தல் வரும்போதெல்லாம் கச்சத் தீவு கேடயத்தைத் தூக்கிக் கொண்டு வந்தவர்கள், இப்போது



தொகுதி மறுசீரமைப்பில் பாஜகவின் சதித் திட்டம் அம்பலத்திற்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகக் கச்சத் தீவை மீண்டும் கிளப்புகிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் கொடுத்த அடி ஆளுநருக்கு நினைவு இருக்கிறதா? அப்படியான பதிலடியைத் தொகுதி மறுசீரமைப்பிலும் கிடைக்கும்.

கச்சத் தீவு பற்றிய கப்ஸா கதைகளை பேசுவதை நிறுத்துங்கள் ஆளுநரே! இலங்கை அரசால் கைது செய்யப்பட்ட நமது மீனவர்களை விடுதலை செய்ய உங்கள் எஜமானர் மோடியிடம் கோரிக்கை வையுங்கள். அரசியல் செய்ய அண்ணாமலை இருக்கிறார். ஆளுநர் அவரோடு போட்டியிட வேண்டாம்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## “இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!”

# நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு - சென்னை கலைவாணர் அரங்கில் திருமணம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைக்கிறார்!

### சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை,மார்ச்.3-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக துறைமுகம் மேற்கு பகுதி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 18, இதயம் இணையும் இல்லறம்! உதயம் வாழ்த்தி ஒளிதரும்!! எனும் தலைப்பில் நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு 12.03.2025 அன்று காலை 9.00 மணியளவில், சென்னை, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

இத்திருமண விழாவில் பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்கிறார். எஸ்.இராஜசேகர், இரா. நரேந்திரன், ஜி.எம்.தேவன், பி.ஸ்ரீராமுலு, இசட்.ஆசாத், எம்.விஜயகுமார், என்.பி.எம்.சேக்அப்துல்லா, ஆர். கலைச்செல்வி, எம்.இ.கனி, எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், பி.விஜயகுமார், பிரதீப்குமார், ராஜேஷ் ஜெயின், வெ.பரிவீன் முன்னிலை, பா.தீ.

துறைமுகம் மேற்கு கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: மா.ஜெய்சங்கர், பா.கதிரவன்,

ஆர்.ரவிச்சந்திரன், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன், எம்.பரத்குமார், கே.கவியரசு ஆ.நா.பார்த்திபன், பா. அண்ணாதுரை, ஜி.ராமமூர்த்தி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் திருமண விழாவில், நிச்சயிக்கப்பட்ட இணையர்களுக்கு - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும், இத்திருணவிழாவில் மேயர் பிரியா ராஜன், தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ,

ஏ.வெற்றியழகன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, கே.எஸ்.எம்.நாதன், சி. மகேஷ்குமார், வே.உமாகாந்த், ஆர். வரதன், எஸ்.மணிமுடி, சங்கரிநாராயணன். மாவட்ட நிர்வாகிகள்: கோ. ஏகப்பன், தேவஜவஹர், புனிதவதி எத்திராசன், பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி.எப்.வ.முரளிதான், எ.நாகராசன், எம்.சி, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, வே.வாசு, கூ. பி.ஜெயின், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர்,

டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம். டி.ஆர்.நாகராஜன், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், வானவில் விஜய், ந.துலுக்கானம், பி.உதயசங்கர், தாமோதரன், எல்.பி.எப். மோகன், பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, இரா.வீரமணி, ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், துரைக்கண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி, கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம். பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்த்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம. முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், பூக்கடை.எஸ்.வெங்கடேசன், எல். சாந்திலால். ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர்கள் சேப்பாக்கம்.வே.பா.பிரபாகரன் டி.சதிஷ்குமார், நன்றி கூறுகிறார்கள்.






## எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் தலைமை! மு.கோவிந்தராஜ் ஏற்பாடு!

# ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் தலைவர் பிறந்தநாள் ! 1000 நபர்களுக்கு சிற்றுண்டி!

### ஆர்.டி.சேகர் வழங்கினார் ! ஜே.ஜே.எபினேசர் - நேதாஜி யு.கணேசன் முன்னிலை !

*சென்னை மார்ச் 03.*

*ஆர்.கே.நகர் மேற்கு பகுதி சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு (28.02.2025 வெள்ளிக்கிழமை) காலை 9.00 மணியளவில் சிற்றுண்டி 1000 நபர்களுக்கு வழங்கப்பட்டது.*

*ஆர்.கே.நகர் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ் பாண்டியன் தலைமையில் பகுதி துணை செயலாளர் மு.கோவிந்தராஜ் ஏற்பாட்டில், சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், வட்ட செயலாளரும் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் எம்.சி, ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, வழங்கினார்.*

*இதில் பகுதி நிர்வாகிகள் மாஸ் டி.வெங்கடேசன், எம்.லோகநாதன், டி.திராவிட செல்வி, பி.சீனிவாசன், வட்டச் செயலாளர்கள் ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, கி.தேவன், வட்ட நிர்வாகிகள் ஜி. ராஜேந்திரன், வி.மணிமாறன், எம்.நடராஜன், ஆர். பழனி, எஸ்.ஜான் கென்னடி, எஸ்.சொக்கலிங்கம், கே.ஜானகிராமன், எஸ்.எம்.பரசுராமன், என் பீல்டுதுரைராஜ், எஸ். பொன்ராஜ், எஸ்.எஸ். மணி, வி.கார்த்திக், எம். பி.கிளைமன்ராஜ், எஸ். சூரியபிரபா, ஆர்.சூரிய காந்தா, டி.கிரி, எஸ். கார்த்திக், எம்.செல்வம், ஜி.ஏழுமலை ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.*